3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிக்கை முடிந்தவுடன் பார்க்கலாம்.*

4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) புதிய சாலைகள், இரயில்வே கடவுப் பாலங்கள் அமைத்தல், முக்கிய சாலைகள் பராமரிப்பு உள்ளிட்ட பணிகள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதுகாப்பான போக்குவரத்திற்கும், வேகமான பொருளாதார வளர்ச்சிக்கும், ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் முக்கியக் காரணியாக விளங்குவது சாலைக் கட்டமைப்பு என்பதால், சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு எனது தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறைமூலம் 18,056 கோடி ரூபாய் மதிப்பிலான சாலைகள் மற்றும் பாலங்கள் அமைக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 10,490 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நடைபெற்று வருகின்றன.*

இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் 1,855 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பின்வரும் சாலைகள் மற்றும்